OS: 302/2018

Date: 18.11.2022

பெயர் : நீலமேகம்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி - 1 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில்</u>**

என்னிடம் காட்டப்படும் 10.03.1971 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரத்தின் அசல் ஆவணத்திலிருந்து எடுக்கப்பட்ட சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ.வ.28/2011 என்ற வழக்கு பாகப்பிரிவினை கேட்டு மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் எனது சித்தப்பா பழனிவேல் தாக்கல் செய்தார், அவர் இறந்ததால் அதற்கு பின்னிட்டு நான் வழக்கை நடத்துகிறேன். நான் மேற்படி வழக்கில் ஆஜராகவில்லை என்பதால் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். 2011 வழக்கு தாக்கல் செய்யும்போதே எனது தாத்தா ராமசாமிகவுண்டர் 1974 கிரயம் கொடுத்தது 2011ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்தபோதே எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது.

நான் கூட்டாக தாவா சொத்தினை அனுபவித்து வருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அ.வ.28/2011 வழக்கில் நானும் வாதியாக இருந்தேன் என்றால் சரிதான். அ.வ.28/2011 வழக்குரை சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த வழக்கில் 1974, 1978 ஆகிய கிரய பத்திரங்களை குறிப்பிட்டுள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம். நான் வழக்கில் செல்லத்தக்கது அல்ல என கேட்கக்கூடிய இரண்டு ஆவணங்களுக்கு காலவரையறை முடிந்தபின்புதான் நான் கேட்கிறேன் என்பதால் அதனை தற்போது செல்லத்தக்கது அல்ல என கேட்கமுடியாது என்றால் சரியல்ல.

தாவா A schedule சொத்து முழுமையாக ராமசாமிகவுண்டருக்குத்தான் பாத்தியம் என்றும், அதனை பொறுத்து வேறு யாரும் அதனை பிரிக்க கேட்க முடியாது என்றால் சரியல்ல. ராமசாமிகவுண்டர் உயிருடன் இருந்த காலத்தில் சொத்தினை விற்பனை செய்துவிட்டதால் வேறு யாரும் அதில் உரிமை கோர முடியாது என்று சொன்னால் அவர் உயிருடன் இருந்தபோது சொத்து விற்கப்படவில்லை. ராமசாமிகவுண்டருக்கு பிரிந்த சொத்துக்களில் அவர் சொத்துக்களை வில்லங்கமோ, விற்பனையோ செய்யக்கூடாது என

சொல்லப்பட்டுள்ள ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் உள்ளது என தவறுதலாக புரிந்துகொள்ளப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் பாகம் கேட்க எனக்கோ, பிரதிவாதிகளுக்கோ எந்த உரிமையும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1974ம் ஆண்டு கிரய பத்திரத்தின் சாட்சிகள் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

**(13 முதல் 15 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).**

**ஒப்பம்/PW1**

**ஒப்பம்/சார்பு நீதிபதி, ஓமலூர்**